பக்கங்கள் 13+2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 19 வெள்ளிக்கிழமை 15.11.2024 | அதிர்வு 106

## யாழ்ப்பாணத்தில் சிறீதரனுக்கு அதிகூடிய விருப்பு வாக்குகள்!



(எஸ்.நிதர்ஷன்)

நடைபெற்று முடிவடைந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கின்றது தேசிய மக்கள் சக்தி

## 3 ஆம் இடத்தில் இருக்கும் தமிழரசுக் கட்சிக்கு 8 ஆசனங்கள்



| கட்சி | மொத்த வாக்குகள் | மக்கள் தெரிவு | தேசிய பட்டியல் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 6,863,186 | 141 | 18 | 159 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,968,716 | 35 | 5 | 40 |
| இலங்கை தமிழ் அரசு கட்சி | 257,813 | 7 | 1 | 8 |
| புதிய ஜனநாயக முன்னணி | 500,835 | 3 | 2 | 5 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 350,429 | 2 | 1 | 3 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 87,038 | 2 | 1 | 3 |
| சர்வஜன அதிகாரம் | 178,006 | 0 | 1 | 1 |
| ஐக்கிய தேசிய கட்சி | 66,234 | 1 | 0 | 1 |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | 65,382 | 1 | 0 | 1 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 39,894 | 1 | 0 | 1 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 33,911 | 1 | 0 | 1 |
| யாழ்.சுயேச்சைக்குழு 17 | 27,855 | 1 | 0 | 1 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 17,710 | 1 | 0 | 1 |

இலங்கையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் வரலாற்று வெற்றி பெற்றுள்ளது.

விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் கட்சியொன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றமை இதுவே முதல் தடவை ஆகும்.

இதற்கமைய, தேசிய மக்கள் சக்தி 141 ஆசனங்களையும், 02




# தமிழரசு இம்முறை தனித்துச் சாதனை

## மக்களால் நிராகரிக்கப்பட்ட நான் தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்றம் செல்லவே மாட்டேன் என்கிறார் சுமந்திரன்

(எஸ்.நிதர்ஷன்)

“எங்களை விட்டு விலகி தனித்துச் சென்றவர்களுக்கு எந்த விதமான ஆணையையும் கொடுக்காமல் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் பிரதான ஆணையைக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காகத் தமிழரசுக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

“மக்கள் முன்பாக வந்து தேர்தலில் போட்டியிட்டு மக்களால் நான் தெரிவு செய்யப்படாத சூழலில் தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்றம் செல்வதை விரும்பவில்லை.” - என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்.ஊடகஅமையத்தில்இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 04



# வன்னியில் ரிஷாத்துக்கே அதிகூடிய விருப்பு வாக்குகள்; தமிழரசில் ரவிகரன் மட்டும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு

## குறைந்த வாக்குகளுடன் செல்வமும் எம்.பியாகின்றார்

**(கி.வசந்தன்)**

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியவர்களில் அதிகூடிய விருப்பு வாக்குகளை ரிஷாத் பதியுதீனும், குறைந்த விருப்பு வாக்குகளை செல்வம் அடைக்கலநாதனும் பெற்றுள்ளனர்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட ரிஷாத் பதியுதீன் அதிகபட்சமாக 21 ஆயிரத்து 18 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

குறைந்த விருப்பு வாக்குகளாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் போட்டியிட்ட செல்வம் அடைக்கலநாதன் 5 ஆயிரத்து 695 விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

மேலும், இலங்கைத் தொழிலாளர் கட்சியில் காதர் மஸ்தான் 13 ஆயிரத்து 511 விருப்பு வாக்குகளையும், இலங்கைத் தமிழரசுக் கட்சியில் துரைராசா ரவிகரன் 11 ஆயிரத்து 215 விருப்பு வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தியில் செ.திலகநாதன் 10 ஆயிரத்து 652 விரும்பு வாக்குகளையும், ம.ஜெகதீஸ்வரன் 9 ஆயிரத்து 280 விருப்பு வாக்குகளையும் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.



## வடிவேல் சுரேஷ் 'அவுட்'

பதுளை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி ஆறு ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி இரண்டு ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன.

புதிய ஜனநாயக முன்னணிக்கு ஓர் ஆசனம் கிடைக்கப் பெற்றுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் போட்டியிட்ட ஐக்கிய ஜன நாயகக் குரல் கட்சியோ அல்லது அ.அரவிந்தகுமார் போட்டியிட்ட தராசு அணியோ வெற்றி பெறவில்லை. இதன் மூலம் முன்னாள் தமிழ் எம்.பிக்கள் இருவரும் தோல்வி அடைந்துள்ளனர்.

**மூன்றில் இரண்டு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி**

தேசியப் பட்டியல் மூலம் 18 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டுள்ளது. இதன்படி, மொத்தமாக 159 ஆசனங்களைத் தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்டுள்ளது.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி 35 ஆசனங்களையும், தேசியப் பட்டியல் மூலம் 5 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டுள்ளது. இதன்மூலம், ஐக்கிய மக்கள் சக்தி மொத்தமாக 40 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி 7 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டதுடன் தேசியப் பட்டியல் ஊடாக ஓர் ஆசனத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. இதற்கமைய இலங்கைத் தமிழரசுக் கட்சி மொத்தமாக 8 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

புதிய ஜனநாயக முன்னணி 3 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டதுடன் தேசியப் பட்டியல் ஊடாக 2 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. இதன்படி, புதிய ஜனநாயக முன்னணி மொத்தமாக 5 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 2 ஆசனங்களையும், தேசியப் பட்டியல் ஊடாக ஓர் ஆசனத்தையும் பெற்றுக்கொண்டுள்ளது. இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மொத்தமாக 3 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 2 ஆசனங்களையும், தேசியப் பட்டியல் மூலம் ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளது. இதன்படி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மொத்தமாக 3 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

**யாழ்ப்பாணத்தில்...**

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி**

தேசிய மக்கள் சக்தி சார்பில் மூவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், சுயேச்சைக் குழு 17 ஆகியவை சார்பில் தலா ஒருவர் என மூவர் உள்ளடங்கலாக மொத்தம் 6 பேர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் தேசிய மக்கள் சக்தி சார்பில் கருணநாதன் இளங்குமரன் (32,102 விருப்பு வாக்குகள்), வைத்தியர் சண்முகநாதன் ஸ்ரீ பவானந்தராஜா (20,430 விருப்பு வாக்குகள்), ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் (17,579 விருப்பு வாக்குகள்) ஆகியோரும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் முன்னாள் எம்.பி. சிவஞானம் சிறீதரன் (32,833 விருப்பு வாக்குகள்), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் முன்னாள் எம்.பி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (15,135 விருப்பு வாக்குகள்), சுயேச்சைக் குழு 17 சார்பில் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா (20,487 விருப்பு வாக்குகள்) ஆகியோர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



# அம்பாறையில் இம்முறை தமிழரசுக்கு ஓர் ஆசனம்

## 88 வாக்குகளால் சிலிண்டர் தோல்வி

(வி.ரி.சகாதேவராஜா)

பத்தாவது நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி நான்கு ஆசனங்களுடன் மாவட்டத்தைக் கைப்பற்றியது.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக தேசிய மக்கள் சக்தி அம்பாறை மாவட்டத்தை வெற்றி கொண்டது.

அந்தக் கட்சி ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 313 வாக்குகளைப் பெற்று நான்கு ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது .

அடுத்ததாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 46 ஆயிரத்து 899 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 33 ஆயிரத்து 911 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி 33 ஆயிரத்து 632 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளன.



அம்பாறை மாவட்டத்தில் மொத்தமாக 7 ஆசனங்களுக்காக 640 பேர் போட்டியிட்டார்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியை விட ஆக 129 வாக்குகளால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உயர்ந்துள்ளது. அதேவேளை ஆக 88 வாக்குகளால் புதிய ஜனநாயக முன்னணி தோல்வியைத் தழுவியது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி 33 ஆயிரத்து 632 வாக்குகளையும், புதிய ஜனநாயக முன்னணி 33 ஆயிரத்து 544 வாக்குகளையும் பெற்றுள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆசனம் எதையும் பெறவில்லை. ஆனால், இம்முறை தேர்தலில் முன்னாள் எம்.பி. கவீந்திரன் கோடீஸ்வரன் வெற்றி பெற்று மீண்டும் நாடாளுமன்றம் செல்கின்றார்.





# திருகோணமலையிலிருந்து இரண்டு தமிழ் எம்.பிக்கள்!





(எஸ்.கீதபொன்கலன்)

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து இரண்டு தமிழ் எம்.பிக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி சார்பில் அருண் ஹேமச்சந்ராவும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் கதிரவேலு சண்முகம் குகதாசனும் தேர்வாகியுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றம் செல்லும் 4 வேட்பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குகள் விவரத்தை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரச அதிபருமான சாமிந்த ஹெட்டியாராச்சி இன்று உத்தியோகபூர்வமாக வெளியிட்டார்.

அதன் விவரம் வருமாறு:-

**தேசிய மக்கள் சக்தி**

1.அருண் ஹேமச்சந்ரா - 38,368

2.அ.க.ரொஷான் பிரியசஞ்ஜன - 25,814

**ஐக்கிய மக்கள் சக்தி**

1.இம்ரான் மஹ்ரூப் - 22,779

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**

1. கதிரவேலு சண்முகம் குகதாசன் - 18,470

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## தமிழரசு இம்முறை...

இதன்போது அவர் மேலும் தெரிவித்த தாவது:-

"நடைபெற்ற முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தேசிய மக்கள் சக்திக்கு எங்களது வாழ்த்துதல்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதுவொரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி. இந்தப் பிரதிநிதித்துவ முறைமை வந்த பிறகு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தனித்து ஒரு கட்சி எடுப்பது மிகவும் கடினமானதாக இருந்திருக்கின்றது.

உண்மையைச் சொல்லப்போனால் தேர்தல் முடிவுகளோடு எந்தக் கட்சிக்கும் இப்படியான பெரும்பான்மை கிடைத்தது இல்லை. 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வித்தியாசமான தேர்தல் முறையிலே ஆறில் ஐந்து பெரும்பான்மை ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான அரசுக்குக் கிடைத்திருந்தது.

அப்படியான ஒரு பெரும்பான்மை கிடைக்காது என்ற அடிப்படையிலும்தான் இந்தப் புதிய முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்த கையோடு மஹிந்த ராஜபக்ஷ கூட தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை எடுத்திருக்கவில்லை.

அதற்குப் பின்னர் கட்சி மாறல்கள், கட்சித் தாவல்கள் ஊடாகத்தான் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தது.

ஆனால், இந்தத் தடவை மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பதற்கும் அப்பால் சென்று 159 ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி பெற்றிருக்கின்றது. இது உண்மையில் வியத்தகு வெற்றி. அப்படியான வெற்றியை ஈட்டியவர்களுக்கு மீண்டும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதில் இன்னொரு விடயமாக கடந்த நாடாளுமன்றத்திலே மூன்றே மூன்று ஆசனங்களை வைத்திருந்த தேசிய மக்கள் சக்தி இந்த நாடாளுமன்றத்தில் 159 ஆசனங்களைத் தனித்துப் பெற்றிருப்பது இன்னொரு சாதனை.

கட்சி தாவல்கள் நிறைந்த எங்களுடைய அரசியல் கலாசாரத்திலே அவர்கள் தெட்டத் தெளிவாக வேற கட்சிகளில் இருந்து தங்களுடைய கட்சிக்கு யாரும் வர வேண்டாம் என்றும், தாங்கள் யாரையும் எடுக்க மாட்டோம் என்றும் சொல்லி தனித்து இந்த வெற்றியை ஈட்டியிருக்கின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் அநு ரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்றதே வியப்பான விடயமாகப் பலராலும் நோக்கப்பட்டது. அதற்கு ஒருபடி மேலே சென்று இப்போது நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அப்பால் மிகப் பெரியதொரு பெரும்பான்மையை அவர்கள் பெற்றிருக்கின்றார்கள்.

இந்த இடத்திலே தேசிய மக்கள் சக்தி தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே மக்களுக்குச் சொன்ன விடயங்களை நாங்கள் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். இப்படியாக மக்கள் ஆணை உங்களுக்குக் கொடுக்கப்பட்டு இருப்பது முக்கியமாக தேர்தல் அறிக்கை விஞ்ஞாபனத்திலே தாங்கள் குறிப்பிட்ட வாக்குறுதிகளுக்காகவேதான். ஆகையினால் அதைச் செய்து நிறைவேற்றும்படியாக இந்த ஆணை கொடுக்கப்பட்டும் இருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் சொன்னதற்கு மக்கள் உங்களுக்கு ஆணை கொடுத்தார்கள். அதனை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்திலே மூன்றில் இரண்டுக்கும் மேற்பட்ட பெரும்பான்மை தேவையாக இருந்த நிலையில் இப்போது அதனையும் கொடுத்திருக்கின்றார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் அடிப்படையான கொள்கைகளில் ஒன்று நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான். மேலும் அவர்களது தேர்தல் அறிக்கையிலே தெட்டத் தெளிவாக புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்பதையும் கூறியிருக்கின்றார்கள்.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலே 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான நல்லாட்சி என்று தங்களை அழைத்துக் கொண்ட அந்த ஆட்சியின் காலகட்டத்திலே செய்யப்பட்ட வரைபைப் பூர்த்தியாக்குவோம் என்று ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படியாக பல விடயங்கள் அவர்களுடைய வாக்குறுதிகளிலே கொடுக்கப்பட்டு இருக்கின்றது.

இந்த விடயங்களைத் துரிதமாக அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அந்த விடயங்களிலே எங்களுடைய கட்சியின் ஆதரவு சரியான திசையில் அவர்கள் செல்வதற்கு எங்களுடைய பூரணமான ஒத்துழைப்பு இருக்கும் என்பதையும் இந்த வேளையில் நான் சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

இவ்வாறு பல விடயங்கள் அடுத்த வருட ஆரம்பத்திலே செய்ய இருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கூறியிருக்கின்றார். அத்தோடு உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் சீக்கிரமாக நடத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றக் கட்டளை இருக்கின்றது. அதனையும் செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

அதற்கும் மேலாக முடக்கப்பட்டு இருக்கின்ற மாகாண சபைத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டும். உரிய சட்ட திருத்தத்தின் மூலமாக அது செய்யப்படலாம். சென்ற நாடாளுமன்றத்தின் இறுதி நாட்களில் அந்தச் சட்ட மூலத்தின் இறுதி வாசிப்பு நிறைவேற்றப்பட்டு வெறுமனே மூன்றாம் வாசிப்பு அறிவிப்பு செய்யப்பட இருந்த நேரத்தில் அது செய்யப்படாமல் கைவிடப்பட்டது அனைவருக்கும் ஞாபகம் இருக்கும்.

ஆகையினாலே இந்தச்சிறியசட்டதிருத்தத்தை உடனடியாகச் செய்து மாகாண சபை முறைமையை திரும்பவும் அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் நாங்கள் முன்வைக்கின்றோம். அதற்கான வாக்குறுதிகளையும் அவர்கள் ஏற்கனவே கொடுத்தும் இருக்கின்றார்கள்.

மேலும் இந்தத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிட்டது எல்லலோருக்கும் தெரியும். தமிழரசுக் கட்சியோடு இணைந்து வெவ்வேறு கட்சிகள் கூட்டுச் சேர்வதும் பின்னர் விலகிச் செல்வதும் வழக்கமாக இருந்திருக்கின்றது.

இந்தத் தேர்தலுக்கு முன்னர் எங்களோடு கூட்டுச் சேர்ந்திருந்த பங்காளிக் கட்சிகளான ரெலோவும் புளொட்டும் விலகி புதிதாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்று குத்துவிளக்குச் சின்னத்திலே அவர்கள் பயணித்தார்கள். இதற்குப் பின்னர் இப்போது இதனைச் சங்கு சின்னமாக மாற்றியிருக்கின்றார்கள்.

ஆகையினால் தமிழரசுக் கட்சி தனித்து மக்கள் முன்பாக ஆணைக்காகச் செல்லுகின்றபோது பலருடைய விமர்சனங்கள் இருந்தன. அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்து விட்டது, தமிழரசுக் கட்சி சின்னாபின்னமாகி விட்டது, சுக்குநூறாகி விட்டது என்றவாறாக இந்தத் தேர்தல் காலத்தில் கூட சொல்லப்பட்டது.

எங்களுடைய கட்சியில் இருந்தும் சிலர் விலகிச் சென்று வேறு கட்சிகளிலும், சுயேச்சைக் குழுக்களிலும் போட்டியிட்டிருக்கின்றார்கள். ஆனால், இந்தத் தேர்தல் முடிவு எங்களுடைய கட்சிக்குப் பலமான மக்கள் ஆணையைக் கொடுத்திருக்கின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பத்து ஆசனங்கள் இருந்த போதிலும் தமிழரசுக் கட்சிக்கு ஆறு ஆசனங்கள்தான் அதில் இருந்தன. இப்போது தனித்துப் போட்டியிடுகின்றபோது எங்களுக்கு எட்டு ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. எங்களை விட்டு விலகி தனித்துச் சென்றவர்களுக்கு எந்தவிதமான ஆணையையும் கொடுக்காமல் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் பிரதான ஆணையைக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காகத் தமிழரசுக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்தத் தேர்தல் பரப்புரை காலத்திலே நாங்கள் தெளிவாக ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தோம். அதாவது இணைந்த வடக்கு - கிழக்கு எங்களது தாயகம், அதிலே எங்களுக்கு சுயநிர்ணய உரித்து உண்டு. நாங்கள் ஒரு மக்களாக - ஒரு தேசமாக அதிலே வாழுகின்றோம் என்பதை உறுதி செய்வதற்காக வடக்கு - கிழக்கு முழுவதும் ஒரு கட்சிப் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும் எனக் கேட்டிருந்தோம்.

அதுவும் தமிழரசுக் கட்சி தவிர்ந்த வேறு எந்தக் கட்சிகளுக்கும் அந்த ஆற்றல் இல்லை என்று மக்களுக்கு நாங்கள் தெளிவாகச் சொல்லியிருந்தோம். இன்று வெளியாகி இருக்கின்ற தேர்தல் முடிவுகளிலே அது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் மக்கள், எமது கட்சி பிரதிநிதிகளைத் தெரிவு செய்துள்ளனர்.

இதில் மட்டக்களப்பில் விசேடமாக மூன்று ஆசனங்களைப் பெற்றுள்ளோம். இதேநேரம் வேறு இடங்களிலும் ஒவ்வொரு ஆசனங்களைப் பெற்றுள்ளோம். இது எங்களது கட்சிக்குத் தோல்வி என்பதை ஒப்புக்கொள்கின்றோம். இதில் மிக விசேடமாக யாழ்ப்பாணம் ஒரேயொரு ஆசனத்தைப் பெற்றிருக்கின்றோம்.

என்னைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட ரீதியிலும், கடந்த 14 வருடங்கள்

(05ஆம் பக்கம் பார்க்க)



# மட்டக்களப்பில் 3 ஆசனங்களுடன் தமிழரசு வெற்றி! சாணக்கியனுக்கு அதிகூடிய விருப்பு வாக்குகள்!!

## பிள்ளையான் கட்சி இம்முறை தோல்வி



நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 96 ஆயிரத்து 975 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

முன்னாள் எம்.பி. இராசமாணிக்கம் சாணக்கியன் 65 ஆயிரத்து 458 விருப்பு வாக்குகளையும், முன்னாள் எம்.பி. ஞானமுத்து ஸ்ரீநேசன் 22 ஆயிரத்து 773 விருப்பு வாக்குகளையும், இளையதம்பி சிறிநாத் 21 ஆயிரத்து 202 விருப்பு வாக்குகளையும் பெற்று நாடாளுமன்றம் செல்கின்றனர்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தி 55 ஆயிரத்து 498 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தைப் பெற்றுள்ளது. அந்தக் கட்சியின் சார்பில் கந்தசாமி பிரபு 14 ஆயிரத்து 856 விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் செல்கின்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 40 ஆயிரத்து 139 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளது. அந்தக் கட்சியின் சார்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா 32 ஆயிரத்து 410 விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் செல்கின்றார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 31 ஆயிரத்து 256 வாக்குகளைப் பெற்றுள்ள நிலையில் எந்தவொரு ஆசனங்களையும் கைப்பற்றவில்லை.

கடந்த தேர்தலில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்றிருந்தமையுடன் இராஜாங்க அமைச்சுப் பதவியை வகித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நான்காம் பக்கத் தொடர்ச்சி

**தமிழரசு இம்முறை...**

நாடாளுமன்றத்திலும் சேவை செய்த நான் இந்த முறை மக்களால் தெரிவு செய்யப்படவில்லை. மக்களுடைய தெரிவை நான் மதிக்கின்றேன், ஏற்றுக்கொள்கின்றேன். இத்தனை காலமாக எனக்கு எல்லா விதங்களிலும் உறுதுணையாக உதவி செய்து வந்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எங்களுடைய சேவை வடக்கு – கிழக்கு மட்டுமல்லாது முழு நாட்டுக்கும் தொடர்ந்து இருக்கும். மிகவும் பொறுப்புணர்வோடு நாங்கள் எங்கள் பயணத்தை மக்களோடு சேர்ந்து முன்னெடுப்போம் என்ற வாக்குறுதியை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதிய அரசமைப்பு வரைவில் நானும் ஜயம்பதி விக்கிரமரட்னவும் முக்கிய பங்காற்றியிருக்கின்றோம். ஆனால், அவரும் நானும் இந்த நாடாளுமன்றத்தில் இல்லை. ஆனால், அவரும் நானும் இலங்கையில்தான் இருக்கின்றோம். ஆகவே, எந்தவிதமான பங்களிப்பு தேவைப்பட்டாலும் அப்படி தேவைப்படுகின்ற பங்களிப்பை நிச்சயமாக கொடுத்து உதவுவோம்.

தமிழரசுக் கட்சிக்கான தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் தமிழரசின் மத்திய செயற்குழு கூடி முடிவு எடுக்கப்படும். அவ்வாறான சகல முடிவுகளும் எப்போதும் கட்சி முடிவாகவே எடுக்கப்படும். ஆகவே, கட்சி என்ன தீர்மானம் எடுக்கும் என்று நான் முன்கூட்டியே சொல்லல முடியாது.

எங்களது கட்சியைப் பொறுத்த வரையில் கட்சியின் முடிவே இறுதியாக இருக்கும். நான் கட்சியின் சகல முடிவுகளுக்கும் கட்டுப்பட்டவனாக இருப்பேன். ஆனால், தேசியப் பட்டியல் ஆசன விடயத்தில் நான் என்னுடைய நிலைப்பாட்டைத் தெளிவாக ஏற்கனவே சொல்லி இருக்கிறேன்.

அதாவது மக்கள் முன்பாக வந்து தேர்தலில் போட்டியிட்டு மக்களால் நான் தெரிவு செய்யப்படாத சூழலில் தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்றம் செல்வதை விரும்பவில்லை என்பதைத் தெளிவாகவே சொல்லியுள்ளேன். ஆனாலும், என்னுடைய அரசியல் செயற்பாடு தொடர்ந்தும் இருக்கும்.

சிறீதரன் மிகப் பெரிய வெற்றி பெற்றிருக்கின்றார். அதிகளவான விருப்பு வாக்குகளையும் பெற்றுள்ளார். அவர் உட்பட தமிழரசுக் கட்சியில் இம்முறை வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள். அவர்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விரைந்து செய்க!

தீப்பெட்டியைக் கொண்டு விளக்கும் ஏற்றலாம். வீட்டையும் எரிக்கலாம். அது தீப்பெட்டியை கையாளுபவரின் செய்கையைப் பொறுத்தது.

அப்படி ஒரு தீப்பெட்டிதான் இப்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவின் கைகளில் மூன்றில் இரண்டு பங்கையும் கடந்த பெரும்பான்மைமிக்க நாடாளுமன்ற அதிகாரத்துடன் புதிய ஆட்சியாக ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றது.

இந்த அமோக வெற்றியை கையில் வைத்துக்கொண்டு, நாட்டை புதிய பாதையில் கட்டி எழுப்புவதும் அல்லது முன்னைய தென்னிலங்கை அரசியல்வாதிகள் போல இனவாதத்துடன் செயல்பட்டு, நாட்டைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்குவதும் அவரது தலைமையிலான ஆட்சியில்தான் தங்கி இருக்கின்றது.

அடுத்து வரும் ஆண்டு அவரின் அரசு எந்த வழியில் செல்லப் போகின்றது என்பதை வெளிப்படுத்தும்.

இதுபோன்று மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கிய இலங்கை மக்கள் அவரின் ஆட்சிச் சீரழிவு காரணமாக அவரைப் பதவியிலிருந்து ஓட ஓட விரட்டியமை இந்த நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த விடயம்தான். மக்களின் ஜனநாயகத் தெரிவுக்கு எதிரான அந்தப் புரட்சிக்குப் பின்னணியில் செயல்பட்ட அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அந்த மக்கள் எழுச்சியின் ஆழ அகலம் நன்கு புரியும். ஆகவே அந்த வழியில் தமது ஆட்சி போகாமல் அவர் பார்த்துக் கொள்வார் என்று நம்பலாம்.

தற்போதைய நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை உள்ளடக்கிய இந்த அரசமைப்பை 46 ஆண்டுகளுக்கு முன்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொண்டு வந்த போது அவருக்கு கிட்டிய ஆறில் ஐந்து நாடாளுமன்றப் பெரும்பான்மை போன்ற ஓர் அதீதப் பெரும்பான்மையை இந்தத் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசுக்கு இலங்கை மக்கள் வழங்கி இருக்கின்றார்கள்.

அவர் தனது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட மாதிரி நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை மாற்றி அமைப்பதற்கான இலகுவான வாய்ப்பை இந்த நாடாளுமன்றப் பெரும்பான்மை மூலம் மக்கள் அவருக்கு வாரி வழங்கியிருக்கின்றார்கள் என்பது உறுதி.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை விரைந்து ஒழிப்பதற்கான பிரகாசமான வாய்ப்பு இலங்கையில் நான்கு தசாப்த கால வரலாற்றில் இப்போதுதான் முதல் தடவையாக முழு அளவில் கிடைத்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

காலம் காலமாக எதிர்க்கட்சி வரிசைகளில் இருந்து கொண்டு, நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும் என்று விடாது குரல் எழுப்பிய தரப்புக்கு அதற்கான முழுமையான அதிகாரத்தை மக்கள் இப்போது தெளிவாக வழங்கி இருக்கின்றார்கள்.

2016 முதல் 2019 வரை நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு முயற்சியைப் பூரணப்படுத்துவேன் என்று தனது ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்த அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அதனை செய்வதற்கான ஆணையை மக்கள் இந்தப் பொது தேர்தல் மூலம் உறுதியாக வழங்கியுள்ளனர்.

அவர் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து, 2016 - 2019 காலப்பகுதியில் கொண்டுவரப்பட்ட புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியை பூரணப்படுத்தி, நாட்டுக்கு எல்லா தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய ஆட்சி முறையுடன் கூடிய அரசமைப்பை வழங்குவதற்கு இன்னும் ஒரே ஒரு தடை மட்டும்தான் இருக்கக்கூடும்.

அது - உத்தேச புதிய அரசமைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் ஆணையை - அனுமதியை - பெறுவதுதான்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகிய இரண்டிலும் கிடைத்த வெற்றி வாய்ப்புச் சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்தி, அதையும் நிறைவு செய்வது என்றால் அந்த புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியை தாமதப்படுத்தாமல் உடன் விரைந்து செய்து முடிக்க வேண்டும்.

# அம்பாறையில் ஆயிரத்து 199 தபால் வாக்குகள் நிராகரிப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தபால் மூல வாக்குகளில் ஆயிரத்து 199 அரச பணியாளர்களின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

29 ஆயிரத்து 352 வாக்குகள் அளிக்கப்பட்ட பொழுதிலும் ஆயிரத்து 199 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன .

தேசிய மக்கள் சக்தி 17,316 வாக்குகளையும் ஐக்கிய மக்கள் சக்தி 2272 வாக்குகளையும் இலங்கை தமிழரசுக் கட்சி 1899 வாக்குகளையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1599 வாக்குகளையும் புதிய ஜனநாயக முன்னணி 1326 வாக்குகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வாக்களிப்பு நிலையத்தில் போதையில் காணப்பட்ட இரண்டு பொலிஸார் கைது!

வாக்களிப்பு நிலையத்தில் போதையில் தள்ளாடிய இரண்டு பொலிஸார் மாத்தறையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை, கிரிந்த ஜயவிக்ரம கனிஷ்ட கல்லூரி வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றிய இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே போதையில் இருந்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொனராகலை பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும், கிரிந்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் பயிலுனர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளனர்.

இரண்டு பொலிஸாரும் நேற்றைய தினம் வாக்குச்சாவடியில் மதுபோதையில் தள்ளாடியதாக பொது மக்கள் தகவல் அளித்தனர்.

அந்தத் தகவலின் பிரகாரம், திஸ்ஸ மஹாராம உதவி பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரையின் பேரில் திஸ்ஸ மஹாராம பொலிஸாரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# எல்லைக்குள் கட்டுப்படாத வாக்களிப்பு என வர்ணிக்கப்பட்ட 2024 வாக்களிப்பு!

2024 நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பை இனம் மதம் என வாக்காளரை சிறையில் அடைத்த எல்லைக்குள் கட்டுப்படாத வாக்களிப்பு என வர்ணித்துள்ள கிரிக்கெட் வர்ணணையாளர் ரொசான் அபயசிங்க.

நகரங்கள், கிராமங்கள், மாவட்டங்கள், மாகாணங்கள் அனைத்தும் ஒரே குரலில் பேசியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக ஊடக பதிவில் அவர் இந்தப் விடயத்தைத் தெரிவித்துள்ளார். மேலும் தெரிவித்துள்ளதாவது,

2019 இல் அப்போதைய அரசின் வெற்றி மிகப் பெரியது எனப் பாராட்டப்பட்டது.

ஆனால் அந்த வெற்றியில் ஒரு முக்கியமான விடயமிருந்தது, அதாவது மக்கள் வாக்களித்த விதத்தில்.



வடக்கும், கிழக்கும் மலையகமும் தொடர்ந்தும் அரசுக்கு எதிராக வாக்களித்திருந்தன. அதன் மூலம் அவர்கள் தென்பகுதி தலைமைத்துவத்தை நம்பவில்லை என்பதை மீண்டும் வெளிப்படுத்தினார்கள்.

2024 தேர்தல் முடிவு மகத்தானது மாத்திரம் ல்லை இது ஒரு சுனாமி. .மேலும் வாக்களிப்பு இடம்பெற்ற விதம்தான் இதற்கு மகுடம் போல் காணப்படுகின்றது.

இனம், மதம் என வாக்காளரை சிறையில் அடைத்த எல்லைக்குள் கட்டுப்படாத வாக்களிப்பு இது.

நகரங்கள், கிராமங்கள், மாவட்டங்கள், மாகாணங்கள் அனைத்தும் ஒரே குரலில் பேசியுள்ளன.

இது இயற்கையாகவே நாட்டுக்குச் சிறந்த விடயம்.

இலங்கை அதன் அரசியல் அத்தியாயத்தில் ஒரு புதிய பக்கத்துக்குள் நுழைகின்றது. உறுதியளிக்கப்பட்ட மாற்றத்துக்காகக் காத்திருக்கின்றது.– என்றுள்ளது.

# நீரிழிவு தின நடை பயணம்

நவம்பர் 14 ஆம் திகதி உலக நீரிழிவு தினமாகும். இதனை முன்னிட்டு 'தடைகளை உடைத்தல் இடைவெளிகளைக் குறைத்தல்' என்னும் தொனிப்பொருளில் நடைப் பயணம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஜெய்க்கா கட்டட முன்றலில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

நீரிழிவு தினத்தை முன்னிட்டு நடைபெறும் இந்த நடைபயணத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவுச்சிகிச்சைநிலையம்தெரிவித்துள்ளது.



# அம்பாறையில் தெரிவான 7 பேரில் ஐந்து வேட்பாளர்கள் புதிய முகங்கள்

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்று முடிந்த இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஏழு பேரில் ஐவர் நாடாளுமன்றத்துக்குப் புது முகங்களாவர்.

தேசிய மக்கள் சக்தி கட்சியில் தெரிவான வசந்த பியதிஸ்ஸ மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியில் தெரிவான கவிந்திரன் கோடீஸ்வரன் ஆகிய இருவருமே பழைய முகங்களாவர்.

ஏனைய பிரியந்த விஜயரத்ன, மஞ்சுளா ரத்நாயக்க றிசாட் புகாரி, அஷ்ரப் தாஹிர், எம் எஸ். உதுமாலெப்பை ஆகியோர் நாடாளுமன்றுக்குப் புதுமுகங்களாவார்கள்.

அம்பாறை மாவட்ட சனத்தொகை மற்றும் வாக்காளர் எண்ணிக்கையைப் பொறுத்தவரை 3 சிங்களவர், 3 முஸ்லிம்கள் 1 தமிழர் தெரிவாகியுள்ளனர்.

தெரிவானவர்களில் அஷ்ரப் தாஹிர் நிந்தவூர் பிரதேச சபை முன்னாள் தவிசாளராவார். உதுமாலெப்பை முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினராவார்.






# நுவரெலியா மாவட்டத்திலிருந்து நான்கு தமிழ் எம்.பிக்கள் தெரிவு

(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்டத்திலிருந்து இம்முறை 4 தமிழ் வேட்பாளர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 5 ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி கைபற்றியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி 2 ஆசனங்களையும், ஐக்கிய தேசிய கட்சி ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

தேசிய மக்கள் சக்தி கட்சியில் வெற்றி பெற்றவர்கள்:-

மஞ்சுள சுரவீர ஆராச்சி - 78,832 வாக்குகள், மதுர செனவிரத்ன - 52,546 ஆர்.ஜீ.விஜயரத்ன - 39,006, அனுஷ்கா திலகரத்ன - 34,035, கிஷ்ணன் கலைச்செல்வி - 33,346.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் வெற்றி பெற்றவர்கள்:-

பழனி திகாம்பரம் - 48,018, வேலுசாமி இராதாகிருஷ்ணன் - 42,273

ஐக்கிய தேசிய கட்சியில் வெற்றி பெற்றவர்:

ஜீவன் தொண்டமான் - 46438

இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் 68 வீத வாக்குகள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கர்ப்பிணி யானை ரயில் மோதிப் பலி

## செட்டிகுளம் பெரியகட்டு பகுதியில்

வவுனியா செட்டிகுளம் பெரியகட்டு பகுதியில் ரயில் மோதி யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

நேற்று வியாழக்கிழமை இரவு கொழும்பில் இருந்து தலைமன்னார் நோக்கி பயணித்த ரயில் செட்டிகுளம் பெரியகட்டு பகுதியில் சென்றுகொண்டிருந்த போது தண்டவாளத்தின் குறுக்காக நின்ற யானைகளுடன் மோதியது.

விபத்தில் பெண் யானை ஒன்று உடல் சிதறி பலியாகியதுடன் அதன் வயிற்றில் இருந்த குட்டியும் பலியாகியது.

இந்தச் சம்பவத்தையடுத்து, விபத்திற்குள்ளான ரயில் செட்டிகுளம் ரயில் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. யானையின் சடலம் அகற்றப்பட்ட பின்னர் அது மன்னார் நோக்கி பயணிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# வரணி நூலகத்தின் 2024 ஆண்டு தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு

(த.சுபேசன்)

சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி நூலகத்தின் 2024 ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை வரணியில் அமைந்துள்ள தென்மராட்சி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் கதிர்காமநாதன் சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஹறி குழும நிறுவனங்களின் நிறைவேற்றுப்பணிப்பாளர் சோமசுந்தரம் யாதவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வரணி மத்திய கல்லூரி பிரதி அதிபர் தெ.செந்தூரன் , கரம்பைக்குறிச்சி கிராம அலுவலர் திருமதி ம.தீபா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். கௌரவ விருந்தினராக சமூக செயற்பாட்டாளர் சி. பரஞ்சோதி கலந்து கொண்டார்.

நிகழ்வில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றதுடன் – வாசிப்பு மாத போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும்– சான்றிதழ்கள் ஆகியனவும் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் வீட்டு நூலகப் போட்டியில் வெற்றி பெற்றவர்களை கௌரவித்து பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன.









# மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்!

## அங்கஜன் இராமநாதன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பை ஏற்றுக்கொள்வதோடு நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின் பின்னராக வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் தனது ஊடக அறிக்கையில்,

கடந்த காலங்களில் நாம் மக்களுக்காக பொறுப்பெடுத்து மேற்கொண்ட பொறுப்புகளை மக்கள் எம்மிடமிருந்து எடுத்து புதியவர்களின் கைகளுக்கு கொடுத்துள்ளனர்.

இந்த முடிவை வழங்கிய மக்களிடம் நாம் எவ்வித வெறுப்புகளும் கொள்ளப் போவதில்லை. பல்வேறு தேவைகளோடு



வாழும் மக்கள் அவற்றை தீர்ப்பதற்கான வழியைப் புதிதான முறையில் தேர்ந்தெடுத்த ஓர் தீர்மானமாகவே கருதுகிறோம்.

நாம் பதவிகளில் இருக்கும்போது எமது மக்களுக்கு உண்மையாகவும் நேர்மையாகவும் மக்களுடைய தேவைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்தோம் என்ற மனத்திருப்தி முழுமையாக உள்ளது.

ஏனையவர்களைப்போன்று எதையும் செய்யாது காலத்தைக் கடத்திய அரசியல்வாதியாக நான் இருக்கவில்லை என்பது நிதர்சனமானது.

இந்தப் பொறுப்பை மக்கள் இப்போது புதிதாக கையளித்துள்ளவர்களும் சிறப்பாகத் தொடர்வார்கள் என்ற நம்பிக்கையே மக்களிடத்தில் உள்ளது.

இந்தத் தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில், காலங்காலமாகப் பரம்பரை அரசியல் செய்யும் தேவையும் விருப்பமும் எனக்கில்லை. என்னால் எனது சொந்த விடயங்களை கவனிக்க கிடைத்த சந்தர்ப்பமாகவும் இதனை எடுத்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில், மக்களுக்கு என்னால் ஆற்றக்கூடிய சேவைகளை அங்கஜன் இராமநாதன் என்ற தனிநபராகத் தொடர்ந்தும் மேற்கொள்வேன். தோல்விகளைச் சந்திக்காதவர்கள் ஒருபோதும் வெற்றியாளராவதில்லை. அதேநேரத்தில் தோற்றாலும் விட்டுச் செல்வதுமில்லை.

இந்தத் தேர்தலில் எம்மீது நம்பிக்கையோடு வாக்களித்த 12,427 யாழ்., கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நுவரெலியாவில் மழையால் நிறையும் நீர்த் தேக்கங்கள்!

(மஸ்கெலியா நிருபர்)

கடந்த சில நாள்களாக மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் பெய்துவரும் மழையால் நீர்த் தேக்கப் பகுதிகளில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களுக்கும் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

தொடர்ந்து மாலை வேளையில் பெய்துவரும் கன மழையால் மேல் கொத்மலை, காசல்ரீ, மவுசாகல, கென்யோன், லக்சபான, நவலக்சபான, பொல்பிட்டிய, கலுகல, விமலசுரேந்திர ஆகிய நீர் தேக்கங்களின் நீர் மட்டம் 95 சதவீதம்வரை நிறைந்த நிலையில் உள்ளது.

இன்று பெய்த கன மழை காரணமாக சாமி மலை ஓயா காட்மோர் ஓயா மரே ஓயா நல்லதண்ணி ஓயா என்பன வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. கெசல்கமு ஓயாவிலும் வெள்ளம் ஏற்பட்டு உள்ளது.

அதேபோல் ஹட்டன் ஓயாவும் மாகாவெலி கங்கையும் கன மழை காரணமாக வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் எங்கு பார்த்தாலும் பனி மூட்டம் காணப்படுகிறது. இதனால் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக



வாகனங்களை செலுத்துமாறு ஹட்டன் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் வாகன சாரதிகளைக் கேட்டுக் கொண்டார்கள்.

மழை காரணமாக பல வீதிகள் வழுக்கும் நிலையில் உள்ளன. வாகனங்களை மிகவும் அவதானமாகவும் மெதுவாக செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர் ஹட்டன் பொலிஸ் போக்குவரத்து அதிகாரிகள்.



# மருத்துவர் தாக்கப்பட்டதை கண்டித்து தமிழகத்தில் மருத்துவர்கள் போராட்டம்

## 45,000 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு




சென்னை கிண்டியில் அரசு மருத்துவர் கத்தியால் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து தமிழகம் முழுவதும் அரசு மருத்துவர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு நினைவு உயர் சிறப்பு மருத்துவமனையில் பணியில் இருந்த மருத்துவர் பாலாஜியை விக்னேஷ் என்ற இளைஞர் நேற்று முன்தினம் சரமாரியாக கத்தியால் குத்தி தாக்குதல் நடத்தினார். இதில் படுகாயம் அடைந்த மருத்துவர் பாலாஜிக்கு அந்த மருத்துவமனையிலேயே தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், மருத்துவர்தாக்கப்பட்டதை கண்டித்து தமிழகம் முழுவதும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகளை புறக்கணிப்பதாக அரசு மருத்துவர்கள் சங்கம், இந்திய மருத்துவ சங்கம் சார்பில் அறிவிக்கப்பட்டது. தர்ணா போராட்டம், ஒத்துழையாமை போராட்டம் நடத்தப்படும் என அனைத்து அரசு டாக்டர்கள் சங்க கூட்டமைப்பினரும் அறிவித்தனர்.

அதன்படி, தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகளில் மருத்துவர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னையில் தாக்குதல் சம்பவம் நடந்த கிண்டி கலைஞர் நூற்றாண்டு நினைவு உயர் சிறப்பு மருத்துவமனை, ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அரசு மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமிழகம் முழுவதும் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

சென்னையில் அரசு வைத்தியர்கள் சங்க கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பாலகிருஷ்ணன், அரசு மருத்துவர்களுக்கான சட்ட போராட்ட குழு தலைவர் பெருமாள் பிள்ளை, ஈரோட்டில் இந்திய மருத்துவ சங்க தமிழக தலைவர் அபுல்ஹாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மருத்துவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

முன்னதாக, தமிழ்நாடு அரசு வைத்தியர்கள் சங்கத்தினர் காலவரையற்ற போராட்டம் அறிவித்த நிலையில், அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சுவார்த்தை நடத்தினார். இதில் உடன்பாடு ஏற்படாததால், நேற்று போராட்டத்தை தொடர்ந்தனர். இந்நிலையில், கோரிக்கையை நிறைவேற்ற அரசுக்கு ஒரு மாதம் அவகாசம் அளித்து, போராட்டத்தை வாபஸ் பெறுவதாக, அந்த சங்கத்தின் தலைவர் செந்தில் அறிவித்துள்ளார்.

மருத்துவர்கள் போராட்டம் காரணமாக, தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகள் எண்ணிக்கை நேற்று கணிசமாக குறைந்தது. இதனால், மருத்துவ சேவையில் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை. அதே நேரம், பல்வேறு மருத்துவமனைகளில் கடந்த 2 நாள்களாக திட்டமிடப்பட்டிருந்த அறுவை சிகிச்சைகள் தள்ளிவைக்கப்பட்டன.

# கஸ்தூரியை தேடும் மதுரை பொலிஸ் பிணை மனு தள்ளுபடியால் தீவிரம்

பிணை மீன் மனு தள்ளுபடி செய்யப்பட்டதைத் தொடர்ந்து நடிகை கஸ்தூரியை மதுரை திருநகர் பொலிஸார் தேடி வருகின்றனர்.

தமிழக நாயுடு மகாஜன சங்க பொதுச் செயலாளர் சுருதி ரமேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் மாநகர பொலிஸ் ஆணையரிடம் அளித்த புகாரில், தமிழகத்தில் பாகுபாடின்றி அனைவரும் சமமாக ஒற்றுமையுடன் வாழ்கின்றனர்.

கடந்த 3 ஆம் ஆண்டு நடிகை கஸ்தூரி தெலுங்கு பேசும், நாயுடு குல சமுதாய பெண்களை இழிவுப்படுத்தும் நோக்கில் பேசினார். எனவே, அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இவர்களைத் தொடர்ந்து நாயுடு மகாஜன சங்க உறுப்பினர் சன்னாசி



என்பவரும், மதுரை திருநகர் காவல் நிலையத்தில் புகார் ஒன்றை அளித்தார். அதில், 'நடிகை கஸ்தூரி ஒரு யூடியூப் சேனல் காணொலியில் நாயுடு சமுகத்தை பற்றியும், நாயுடு சமுதாய பெண்கள் குறித்தும் அவதூறாக பேசியுள்ளார். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என, குறிப்பிட்டிருந்தார்.

இப்புகார்களின் அடிப்படையில், நடிகை கஸ்தூரி மீது 6 பிரிவுகளின் கீழ் திருநகர் பொலிஸ் ஆய்வாளர் துரைபாண்டி வழக்கு பதிவு செய்தார்.

இந்நிலையில், மதுரை திருநகர் பொலிஸார் தன் மீது தொடர்ந்த வழக்கில் முன் பிணை கேட்டு கஸ்தூரி உயர்நீதி மன்ற மதுரை கிளையில் மனுதாக்கல் செய்தார். இம்மனுவை உயர் நீதிமன்றம் வியாழக்கிழமை தள்ளுபடி செய்தது.

இதைத்தொடர்ந்து, திருநகர் பொலிஸார் அடங்கிய தனிப்படையினர் கஸ்தூரியை தேடி வருகின்றனர். சென்னை பகுதிக்கும் தனிப்படை ஒன்று விரைந்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.





# இஸ்ரேலின் இராணுவத் தலைமையகத்தை குறிவைத்து தாக்குதல் நடத்திய ஹிஸ்புல்லா

இஸ்ரேலின் இராணுவ தலை மைய கம் மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்தை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக ஹிஸ்புல்லா அமைப்பு அறிவித்துள்ளது.

இஸ்ரேலின் மத்திய டெல் அவிவில் உள்ள இராணுவ தலைமையகம் மீது நேற்று இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தாக்குதலானது, ஆளில்லா விமானங்கள் மூலம் நடத்தப்பட்டதாகவும், இலக்குகள் துல்லியமாக தாக்கப்பட்டதாகவும் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளது.

இதேவேளை, லெபனானில் இருந்து வந்த இரண்டு ட்ரோன்களை வடக்கு இஸ்ரேலில் வைத்தே இடைமறித்து அழித்ததாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

எனினும், எந்த ட்ரோன்களும் மத்திய இஸ்ரேலை அடைந்ததாகவோ அல்லது இராணுவ தலைமையகத்திற்கு அருகில் வந்ததாகவோ அறிகுறிகள் தென்படவில்லை என கூறப்படுகிறது.

டெல் அவிவில் உள்ள இராணுவம் மற்றும் அரசாங்கத்தின்



மையமாக இருக்கும் இந்த தளம், போர் அமைச்சரவை உட்பட பல இராணுவ நிறுவனங் களின் தலைமையகத்தை கொண்டுள்ளது. அத்தோடு, இந்த தலைமையகத்தின் மீதான தாக்குதல் அறிவிப்பு தொடர் பில் இஸ்ரேலிய தரப்பில் இருந்து உட னடி கருத்துகள் வெளியிடப்படவில்லை.

# அமெரிக்காவை தொடர்புகொள்ள தயார்: ரஷ்ய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ் அமெரிக்காவுடன் தொடர்புகொள்ள ரஷ்யா தயார் என ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கி லாரோவ் தெரிவித் துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் தொலைபேசியில் உரையாடினார் என கடந்த ஞாயிற்றுக்கிழமை வொஷிங்டன் போஸ்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டி ருந்த நிலையில், ரஷ்யா அதனை திட்டவட்டமாக மறுத்தது.

இந்நிலையில், தலைநகர் மாஸ் கோவில் செர்கி லாரோவ் செய்தியா ளர்களிடம் பேசினார். அப்போது, அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்துடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள ரஷ்யா தயாராக உள்ளதா என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதில் அளித்த செர்கி லாரோவ்,

“வால்டாய் இன்டர்நேஷனல் டிஸ்க ஷன் கிளப்பின் கூட்டத்தில் பேசிய அஜனாதிபதி புடின், தான் எப்போதும் தொடர்புகொள்ளத் தயாராக இருப்ப தாகக் கூறினார். தகவல் தொடர்புக்கு இடையூறு விளைவித்தது நாங்கள்



அல்ல.

எங்களிடம் எதிர்பார்ப்புகளும் இல்லை. அனுமானங்களும் இல்லை. உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டால் நாங்கள் அதனை ஆய்வு செய்வோம்.” – என்றார்.

ரஷ்யா மற்றும் சீனா தொடர்பான அமெரிக்க அரசின் நிலைப்பாடு தொடர்பாக பேசிய லாரோவ்,

“டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமரிக்க நிர்வாகத்துக்கு, சீனாவைக் கட்டுப்படுத்துவது முன்னுரிமைப் பணியாக இருக்கும். அதே நேரத்தில், ரஷ்யாவை இன்றைய அச்சுறுத்தல் என்று அமெரிக்கா கருதுகிறது. சீனா வைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை ஜோ பைடன் நிர்வாகத்தால் எடுக்கப்பட்டது. டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்துக்கும் இது ஒரு முன்னுரிமையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். மேலும் நாங்கள் இன்றைய அச்சுறுத்தலாக இருக்கிறோம். ரஷ்யா ஒரு சக்திவாய்ந்த நாடு என்பது நிரூபிக்கப்படுவதையோ அல்லது மேற்கத்திய நாடுகளின் நம்பகத்தன்மை குறைவதையோ அமெ ரிக்கா அனுமதிக்காது.

எந்தவொரு அமெரிக்க நிர்வாகமும், பலவீனமான ரஷ்யாவையே விரும் புகிறது. ரஷ்யாவை ஒரு போட்டியாகக் கருதி அடக்க முயல்கிறது. அமெரிக் காவை விட செல்வாக்கு மிக்க நாடு உலகில் வேறு எதுவும் இருக்கக்கூடாது என்பதை அமெரிக்கர்கள் நீண்ட கால மாக கூறி வருகின்றனர். அமெரிக்கா தனது நற்பெயருக்கு மட்டுமே அதிக அக்கறை காட்டுகிறது. மற்றவர்களின் குறிப்பாக உக்ரைனியர்களின் நிலை யைப்பற்றி அது கவலைப்படுவதில்லை.” என குறிப்பிட்டார்.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் எப்போது போர் நிறுத்தம் ஏற்படும் என்ற கேள்விக்கு பதில் அளித்த செர்கி லாரோவ்,

“நாங்கள் ஒருபோதும் பேச்சுவார்த் தைக்கு மறுப்பு சொல்லவில்லை என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் மீண்டும் மீண்டும் கூறி உள்ளார்.” என தெரி வித்தார்.

பக்கங்கள் 02

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை 15/11/2024

## ரொறன்ரோவில் இடம்பெற்ற கத்தி குத்தில் ஒருவர் பலி!

ரொறன்ரோவில் இடம்பெற்ற கத்தி குத்து தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

ரொறன்ரோவின் சிட்டி பிளேஸ் பகுதியில் அமைந்துள்ள குடியிருப்பு ஒன்றில் இந்த 02



# கனடா மக்கள் நாட்டிலிருந்து வெளியேறி பிரித்தானியா, ஐரோப்பாவுக்கு செல்லுங்கள்

## காலிஸ்தானியர்கள் தெரிவிப்பு

**கனடாவில் வாழும் மக்களை பிரித்தானியா மற்றும் ஐரோப்பாவுக்கு திருப்பி செல்லுங்கள் என்று காலிஸ்தானியர்கள் கூறிய சம்பவம் கனடா நாட்டில் அரங்கேறியது.**

**இது தொடர்பாக சமூக வலைதளங்களில் அதிகம் பகிரப்படும் வீடியோவில் காலிஸ்தான் ஆதரவாளர் ஒருவர், "இது கனடா, எங்களின் சொந்த நாடு. நீங்கள் (கனடியரகள்) திரும்பி செல்லுங்கள்.** C2



# அயோத்தி ராமர் கோயில் மீது தாக்குதல் நடத்துவோம்: காலிஸ்தான் பிரிவினைவாதி குர்பத்வந்த் சிங் மிரட்டல்

அயோத்தியில் உள்ள ராமர் கோயில் மற்றும் ஏனைய இந்து கோயில்கள் மீது எதிர்வரும் 16, 17 திகதிகளில் தாக்குதல் நடத்துவோம் என காலிஸ்தான் பிரிவினைவாதி குர்பத்வந்த் சிங் பன்னுன் மிரட்டல் விடுத்துள்ளார்.

காலிஸ்தான் தனி நாடு கோரி 02 வரும் சீக்கியர்களுக்கான நீதி அமைப்பு (எஸ்.எப்.ஜே) வெளிநாடுகளில் இருந்து செயல்பட்டு வருகிறது. இந்தியாவில் தடை செய்யப்பட்ட இந்த அமைப்பு இந்தியாவுக்கு எதிரான செயல்பாடு களில் ஈடுபட்டு வருகிறது.

இதன் தலைவர் குர்பத்வந்த் சிங் பன்னுன் தான் பேசும் ஒரு வீடியோவை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள் ளார். அதன் பின்னணியில் அயோத்தி ராமர் கோயிலில் பிரதமர் மோடி பிரார்த்தனை செய்யும் படங்கள் இடம்பெற்றுள்ளன.

அதில் அவர் கூறும்போது "எதிர் வரும் 16 17 திகதிகளில் இந்து கோயில் கள் மீது தாக்குதல் நடத்து 02

# கனடாவில் பதுங்கியிருந்த காலிஸ்தான் பிரிவினைவாதி அர்ஷ் தல்லாவை நாடு கடத்துமாறு இந்தியா கோரிக்கை

கனடாவில் பதுங்கியிருந்த காலிஸ்தான் பிரிவினைவாதி ஒருவரை நாடு கடத்துமாறு இந்திய கோரிக்கை விடுத்துள்ளது.

கனடாவில் இருந்து செயல்பட்டு வரும் காலிஸ்தான் பிரிவினைவாத இயக்கத்தை சேர்ந்த ஹர்தீப்சிங் நிஜ்ஜாரின் நெருங்கிய சகாவான அர்ஷ் தல்லா என்று அழைக்கப்படும் அர்ஷ் சிங் கில். இவர்தான் காலிஸ்தான் புலிப்படை தலைவராக உள்ளார்.

இந்தியாவில் தல்லா மீது கொலை, கொலை முயற்சி உள்பட 50 இற்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன. அவருக்கு எதிராக ரெட்கார்னர் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது.

2023 இல் இந்தியாவால் அவர் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்டார். அர்ஷ் தல்லாவை கைது செய்யக் கூடிய கூடுதல் காரணங்களை அனுப்பி வைக்கும்படி கனடா நீதித்துறை இந்தியாவை கேட்டுக் கொண்டது. அந்த பட்டியல் 2024 ஜனவரி



மாதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் கனடாவில் கடந்த மாதம் ஒக்டோபர் 28 ஆம் திகதி அர்ஷ் தல்லாவும், அவரது சகாவான குர்ஜந்த்சிங்கும் காரில் சென்று கொண்டு இருந்த போது மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள். இதில் அர்ஷ் தல்லா படுகாயம் அடைந்தார்.

இதையடுத்து அங்கு விரைந்து சென்ற கனடா பொலிஸார் அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் அவர்கள் சென்ற காரை சோதனையிட்ட போது துப்பாக்கிச்சூடு நடத்திய வர்கள் மீது அர்ஷ் தல்லா பதில் தாக்குதல் நடத்தியிருப்பது தெரிய வந்தது. இதுதொடர்பாக கனடா பொலிஸார் 2 வழக்குகளை பதிவு செய்துள்ளனர். மேலும் தல்லா வீட்டில் சோதனை செய்த போது அங்கு இருந்து துப்பாக்கிகள், தோட்டாக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதையடுத்து மருத்துவமனையில் இருந்து வெளியேறிய தல்லாவையும், அவரது சகாவையும் பொலிஸார் கைது செய்தனர். தல்லாவும் , அவரது மனைவியும் கனடாவில் உள்ள சுரே பகுதியில் வசித்து வருவது தெரிய வந்துள்ளது.

கனடாவில் அர்ஷ் தல்லா கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரை இந்தியாவிடம் ஒப்படைக்கும்படி கனடாவிடம் மத்திய அரசு வலியுறுத்தி உள்ளதாக வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.




## றொறன்ரோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இருவர் ஒருவரை ஒருவர் கத்தியால் குத்திக்கொண்டதாக பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த தகவலை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

சம்பவத்தில் இருவரும் காயமடைந்திருந்தனர் எனவும் அவர்களை வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும், சிகிச்சை பலனின்றி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

## கனடா மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளையர்கள் மீண்டும் ஐரோப்பா, இங்கிலாந்து மற்றும் இஸ்ரேலுக்கு செல்ல வேண்டும். இது நம் நாடு சைமன் திரும்பி போ. நாங்கள் தான் இந்த நாட்டின் உரிமையாளர்," என பேசியுள்ளார். இவர் பேசும் போதே அங்கிருந்த சிலர் கத்தினர்.

கனடாவில் காலிஸ்தானி இயக்கத்தின் மையமான பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள சர்ரேயில் நடந்த காலிஸ்தானி நிகழ்வில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன.

முன்னதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ, முதன்முறையாக, கனடாவில் காலிஸ்தானிக்கு ஆதரவான கூறுகள் இருப்பதை வெளிப்படையாக ஒப்புக் கொண்டார்.

மேலும், இவர்கள் “ஒட்டுமொத்த சீக்கியசமூகத்தைபிரதிநிதித்துவப்படுத்தவில்லை” என்று வலியுறுத்தி இருந்தார். ஒட்டாவாவில் நடைபெற்ற தீபாவளி கொண்டாட்டத்தின் போது அவர் கருத்து தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே பதற்றம் அதிகரித்து வரும் நிலையில் இந்த கோரிக்கை வெளியாகியுள்ளது.

காலிஸ்தானி பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்ட பின்னணியில், இந்தியா மற்றும் கனடா உயர் அதிகாரிகள் மாறி மாறி குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து வந்ததால் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் மோசமடைந்துள்ளன.

## அயோத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வோம். அயோத்தியில் வன்முறை வெடிக்கும். இந்துத்துவா சித்தாந்தத்தின் அடித்தளத்தை ஆட்டம் காணச் செய்வோம். வன்முறை இந்துத்துவா சித்தாந்தத்தின் பிறப்பிடமான அயோத்தியில் உள்ள ராமர் கோயிலின் அடித்தளத்தை தகர்ப்போம்.

கனடாவின் மிசிசவுகாவில் உள்ள காளிபரி கோயிலில் 16 ஆம் திகதியும் பிராம்ப்டனின் திரிவேணி கோயிலில் 17 ஆம் திகதியும் நடைபெறவுள்ள வாழ்நாள் சான்றிதழ் முகாமில் இந்திய தூதரக அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்துவோம். எனவே கனடாவாழ் இந்தியர்கள் இந்த முகாமில் பங்கேற்க வேண்டாம்.

கனடாவில் உள்ள பல இந்திய வம்சாவளி எம்.பி.க்கள் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் சித்தாந்தத்தை கடைபிடிக்கின்றனர். கனடா எம்.பி. சந்திர ஆர்யா இந்து தீவிரவாதத்தின் முகமாக விளங்குகிறார். அவர் கனடாவுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். அல்லது அங்கிருந்து அவர் உடனடியாக வெளியேற வேண்டும்.” - என்றார்.

கனடாவின் பிராம்ப்டன் நகரில் உள்ள இந்து கோயிலில் இந்துக்கள் மீது காலிஸ்தான் ஆதரவாளர்கள் கடந்த வாரம் தாக்குதல் நடத்தினர். இது தொடர்பாக எஸ்.எப்.ஜே. முக்கிய நிர்வாகி இந்தர்ஜீத் கோசலை கனடா பொலிஸார் கைது செய்தனர். இந் நிலையில் பன்னுன் மீண்டும் மிரட்டல் விடுத்துள்ளார்.